உ

சைவ வினாவிடை

தோத்திரத்திரட்டுள்ள

முதற் புத்தகம்



யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது

சைவ பரிபாலன. சபை.

உ
சிவமயம்

சைவ வினாவிடை

முதற் புத்தகம்

யாழ்ப்பாணத்து நல்லூர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
செய்தது.

வெளியீடு;
சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்
1978

உ

பதிப்புரை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிவபதப்பேறு பெற்றுச் சுமார் பத்து ஆண்டுகள் கழிந்தபின், அவர்களுடைய தெய்வப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றத் தொடங் கப்பெற்றதே எங்கள் சைவபரிபாலன சபை.

அடுத்த ஆண்டு (1979 இல்) நிகழவிருக்கும் பெரு மானாரது நூறாவது குருபூசையைச் சைவமக்கள் பத் சிரத்தையோடு கொண்டாட வேண்டும்; அஞ்ஞான் அன்னார் பதிப்பித்த நூல்களை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும்; என்பது டி சபையாரின் பெரு விருப்பம்.

இன்று தொடங்கும் நாவலர் நூறாவது குருபூசை ஆண்டிலே சபையார் வெளியிடவிருக்கும் நூல்களுக்கு முன்னோடியாக சைவ வினாவிடை முதற் புத்தகத்தை வெளியிடுவது சாலப்பொருந்தும்.

இந்நூல் வெளிவரப் பொருளுதவியவர், ஸ்ரீலஸ்ரீ நாவலர் ஐயா அவர்களின் ஈமக்கிரியைகளைச் செய்யும் உரிமையும தகுதியும்பெற்ற ஸ்ரீ சபாபதிச்செட்டியாரின் பேரனும, செட்டியார் அச்சக உரிமையாளருமாகிய திரு. பே. சோமசுந்தரமாவர்

இந்நூலை அச்சேற்றி வெளியிடப் பெரிதுமுதவிய வர்கள் எங்கள் அச்சகக் கௌரவ அதிபர் திரு. சி. சிவ குருநாதன் M.A. அவர்களும் அவருடைய உதவியாளர்க ளுமாவர். இவர்களனைவருக்கும் எங்கள் நன்றி உரியது

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம்.
3-11-1978

ச. செல்வராசா
தலைவர்

உ

சிவமயம்

சைவ வினாவிடை

1. கடவுளியல்

1. உலகத்துக்குக் கருத்தா யாவர் ?

சிவபெருமான்.

2. சிவபெருமான் எப்படிப்பட்டவர் ?

என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்.

3. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யுந் தொழில்கள் எவை ?

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றுமாம்.

4. சிவபெருமான் இந்த மூன்று தொழில்களையும் எதைக் கொண்டு செய்வார் ?

தமது சத்தியைக்கொண்டு செய்வார்.

5. சத்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?

வல்லமை.

6. சிவபெருமானுக்குச் சத்தி யாவர் ?

உமாதேவியார்.

7. சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர் ?

விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.

8. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமாதேவியாரோடும் எழுந்தருளி இருக்கும் முக்கிய ஸ்தானம் யாது?

திருக்கைலாசமலை.

9. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்விடங்களிலே நின்று அருள் செய்வர் ?

சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும், சைவாசாரியரிடத்திலும், சிவனடியாரிடத்திலும் நின்று அருள் செய்வர்.

திருச்சிற்றம்பலம்

2. புண்ணிய/பாவவியல்

10 சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை ?

வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

11. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவைகள் எவை?

புண்ணியங்கள்.

12. புண்ணியங்களாவன யாவை ?

கடவுளை வழிபடுதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

13. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?

மேலுலகங்களாகிய புண்ணிய லோகங்களிலே போய் இன்பத்தை அநுபவிப்பர்.

14. வேத சிவாகமங்களில் விலக்கப்பட்டவைகள் எவை?

பாவங்கள்.

15. பாவங்களாவன யாவை?

கொலை, களவு கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல் பொய் பேசுதல், விபசாரம், சூதாடுதல் முதலானவைகள்.

16. பாவங்களைச் செய்தவர் எதனை அநுபவிப்பர்?

நரகத்திலே விழுந்து துன்பத்தை அநுபவிப்பர்.

திருச்சிற்றம்பலம்

3. விபூதியியல்

17. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது?

சைவ சமயம்

18. சைவ சமயிகள் சரீரத்திலே அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் யாது?

விபூதி.

19. விபூதியாவது யாது?

பசுவின் சாணத்தை அக்கினியாலே சுடுதலால் உண்டாகிய திரு

20. எந்த நிற விபூதி தரிக்கத்தக்கது?

வெள்ளைநிற விபூதி

21. விபூதியை எதில் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?

பட்டுப் பையிலேனும் சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்.

22. விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்?

வடக்கு முகமாக வேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.

23. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?

நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி வலக்கையின் நடு விரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

24. விபூதி நிலத்திலே சிந்தினால் யாது செய்தல் வேண்டும்?

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

25. நடந்து கொண்டாயினும், கிடந்து கொண்டாயினும் விபூதி தரிக்கலாமா?

தரிக்கலாகாது.

26. எக்காலங்களிலே விபூதி ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும். ?

நித்திரை செய்யப் புகும்போதும், நித்திரை விட்டெழுந்த வுடனும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும் போதும், அத்தமிக்கும் போதும், ஸ்நானஞ் செய்த வுடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனஞ் செய்த பின்னும் விபூதி ஆவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

27 ஆசாரியராயினும், சிவனடியாராயினும் விபூதி தந்தால் எப்படி வாங்கல் வேண்டும் ?

மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கல் வேண்டும்.

28. விபூதி வாங்கித் தரித்துக் கொண்டபின் யாது செய்தல் வேண்டும். ?

முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

29. சுவாமிமுன்னும், குருமுன்னும், சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?

முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.

30. விபூதிதாரணம் எத்தனை வகைப்படும்?

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும். (திரிபுண்டரம்-மூன்று குறி.)

31. திரிபுண்டரந் தரிக்கத்தக்க தானங்கள் யாவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம்

இவைகளுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வது முண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.

32. திரிபுண்டரந் தரிக்குமிடத்து, நெற்றியில் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்?

இரண்டு கடைப்புருவ வெல்லை வரையுந் தரித்தல் வேண்டும். அதிற் கூடினாலுங் குறைந்தாலுங் குற்றமாம்.

33. மார்பிலும் புயங்களிலும் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்?

அவ்வாறங்குல நீளந் தரித்தல் வேண்டும்.

34. மற்றைத் தானங்களில் எவ்வளவு நீளந் தரித்தல் வேண்டும்?

ஒவ்வோரங்குல நீளந் தரித்தல் வேண்டும்.

35. மூன்று குறிகளின் இடைவெளி எவ்வளவினதாய் இருத்தல் வேண்டும்?

ஒவ்வோரங்குல அளவினதாய் இருத்தல் வேண்டும். ஒன்றை ஒன்று தீண்டலாகாது.

திருச்சிற்றம்பலம்

4 திருமூலமந்திரவியல்

36 சைவசமயிகள் நியமமாகச் செபிக்கவேண்டிய சிவமூல மந்திரம் யாது?

ஸ்ரீபஞ்சாக்ஷரம்.

37. ஸ்ரீபஞ்சாக்ஷர செபஞ் செய்தற்கு யோக்கியராவார் யாவர்?

மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய், சிவ தீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

38. ஸ்ரீபஞ்சாக்ஷரத்திலே எத்தனை உரு நியமமாகச் செபித்தல் வேண்டும்?

நூற்றெட்டுருவாயினும், பத்துருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

39. எந்தத் திக்குமுகமாக இருந்து செபித்தல் வேண்டும்?

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும இருந்து செபித்தல் வேண்டும்

40. எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?

முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடுகாலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப் புறங்காலை வைத்து. இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த நிமிர்ந்திருந்துகொண்டு செபித்தல் வேண்டும்.

41. எப்படி இருந்து செபித்தலாகாது?

சட்டை இட்டுக்கொண்டும், தலையிலே வேட்டி கட்டிக்கொண்டும். போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், சௌபீனந் தரியாமலும், வேட்டி தரியாமலும், பேசிக்கொண்டும், இருளில் இருந்துகொண்டுஞ் செபிக்கலாகாது.

42. செபஞ் செய்யும்பொழுது மனம் எங்கே அழுந்திக் கிடத்தல் வேண்டும்?

சிவபெருமானிடத்திலே அழுந்திக் கிடத்தல் வேண்டும்.

43. நிற்கும்பொழுதும், நடக்கும்பொழுதும், இருக்கும்பொழுதும், கிடக்கும்பொழுதும், மற்றை எத்தொழிலைச் செய்யும்பொழுதும் மனசை எதிலே பதித்தல் வேண்டும்?

உயிர்க்குயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளிலே மனசைப் பதித்தல் வேண்டும்.

44. மரிக்கும்பொழுது எப்படி மரித்தல் வேண்டும்?

வேறொன்றிலும் பற்றுவையாது சிவபெருமானிடத்திலே பற்று வைத்து தமிழ் வேதத்தைக் கேட்டுக்கொண்டும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டும் மரித்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

5. நித்தியகருமவியல்

45. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரைவிட்டெழுதல் வேண்டும்.

46. நித்திரைவிட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு, பாடங்களைப் படித்தல் வேண்டும்.

மலசலமோசனம்

47. அதற்குப்பின் யாது செய்யத்தக்கது?

மலசல மோசனஞ் செய்யத்தக்கது.

48. எவ்விடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்?

திருக்கோயிலுக்குத் தூரமாய் உள்ள தனியிடத்திலே மலசலங் கழித்தல் வேண்டும்.

49. எவ்விடங்களிலே மலசலங் கழிக்கலாகாது?

வழியிலும், குழியிலும் நீர்நிலையிலும், நீர்க்கரையிலும், கோமயம் உள்ள இடத்திலும், சாம்பர் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந்தோட்டத்திலும், மரநிழலிலும், உழுத நிலத்திலும், அறுகம் பூமியிலும், பசுமந்தை நிற்கும் இடத்திலும், புற்றிலும், அருவி பாயும் இடத்திலும், மலையிலும் மலசலங் கழிக்கலாகாது.

50. எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு மலசலங் கழித்தல்வேண்டும்?

பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும் இருந்துகொண்டு மலசலங் கழித்தல் வேண்டும்.

51. எப்படி இருந்து மலசலங் கழித்தல் வேண்டும்?

தலையையுங் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி, மூக்கு நுனியைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்து மலசலங் கழித்தல் வேண்டும்.

சௌசம்

52. மலசலங் கழிந்தவுடனே யாது செய்தல் வேண்டும்?

எழுந்து சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒருசாணுக்கு இப்பால் இருந்துகொண்டு சௌசஞ் செய்தல் வேண்டும்.

53. சௌசம் எப்படிச் செய்தல் வேண்டும்?

மண்ணுஞ் சலமுங் கொண்டு, இடக்கையினாலே குறியில் ஒருதரமும், குதத்தில் ஐந்து தரத்துக்கு மேலும், இடைக்கையை இடையிடையே ஒவ்வொரு தரமும், பின்னும் இடக்கையைப் பத்துத்தரமும்,

இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழுதரமுஞ் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால்வரையும், கைகளை முழங்கைவரையும் ஒவ்வொருதரங் கழுவல் வேண்டும்.

54. இப்படிச் செய்தபின் யாது செய்தல்வேண்டும்?

அவ்விடத்தைவிட்டு வேறொரு துறையிலே போய் வாயையும், கண்களையும், நாசியையும், காதுகளையும், கை கால்களில் உள்ள நகங்களையுஞ் சுத்திசெய்து எட்டுத் தரஞ் சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்தல் வேண்டும்.

55. வாய் கொப்பளித்த பின் யாது செய்தல் வேண்டும்?

தலைக் கட்டு இல்லாமல் மூன்றுதரம் ஆசமனஞ் செய்தல் வேண்டும். (ஆசமனம்—உறுஞ்சுதல்.)

56. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?

வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்துவிட்டு, பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து சலத்தை ஆசமித்தல் வேண்டும்.

57. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையானல் யாது செய்தல் வேண்டும்?

பாத்திரத்திலே சலம் கொண்டு ஓரிடத்தில் வைத்துக்கொண்டு, மலசலம் கழித்து சௌசஞ் செய்துவிட்டு, பாத்திரத்தைச் சுத்திசெய்து சலம் மொண்டு வாய் கொப்பளித்து, கால்கழுவல் வேண்டும்.

தந்தசுத்தி

58. சௌசத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது?

தந்தசுத்தி செய்யத் தக்கது.

59. எதனாலே தந்தசுத்தி செய்தல் வேண்டும்?

சலத்தினாலே கழுவப்பட்ட பற்கொம்பினாலேனும் இலையினாலேனும் தந்தசுத்தி செய்தல் வேண்டும.

60. எந்தத் திக்கு முகமாக இருந்து தந்தசுத்தி செய்தல் வேண்டும்?

கிழக்குமுகமாகவேனும், வடக்குமுகமாக வேனும் இருந்துகொண்டு தந்தசுத்தி செய்தல் வேண்டுய.

61. தந்தசுத்தி எப்படிச் செய்தல் வேண்டும்?

பல்லின் புறத்தையும் உள்ளையுஞ் செவ்வையாகச் சுத்திசெய்து ஒரு கழியை இரண்டாகப் பிளந்து அவைகளினாலே நாக்கை வழித்து இடப்புறத்திலே போட்டுவிட்டு, சலம் வாயிற் கொண்டு பன்னிரண்டுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையுங் கை கால்களையுங் கழுவல் வேண்டும்.

62. நின்றுகொண்டாயினும் நடந்துகொண்டாயினும் போர்த்துக்கொண்டாயினும் தந்தசுத்தி பண்ணலாமா?

பண்ணலாகாது.

ஸ்நானம்

63. தந்தசுத்திக்குப்பின் யாது செய்யத்தக்கது?

ஸ்நானஞ் செய்யத்தக்கது.

64. ஸ்நானஞ் செய்யத்தக்க நீர்நிலைகள் யாவை?

ஆறு, ஓடை, குளம், கேணி, மடு முதலியவைகளாம்.

65. ஸ்நானஞ் செய்யுமுன் யாது செய்தல்வேண்டும்?

கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டு கைகளையும் கழுவி, வேட்

டியைத் தோய்த்து, அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவிச் செவ்வையாகத் தேய்த்துக்கொள்ளல் வேண்டும்.

66. எவ்வளவினதாகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும் ?

கொப்பூழளவினதாகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

67. எந்தத் திக்கு முகமாக நின்று ஸ்நானஞ் செய்தல் வேண்டும் ?

நதியிலேயானால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளம் முதலியவைகளிலேயானால் கிழக்குமுகமாகவேனும், வடக்குமுகமாகவேனும் நின்று ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

68. சலத்திலே எப்படி முழுகல் வேண்டும் ?

ஆசமனஞ் செய்து, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டுவிரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக்கொண்டு சிவபெருமானைச் சிந்தித்து முழுகல் வேண்டும்.

69. இப்படி முழுகினவுடனே யாது செய்தல் வேண்டும் ?

ஆசமனஞ் செய்துகொண்டு, கரையிலேறி வேட்டியைப் பிழிந்து தலையிலுள்ள ஈரத்தைத் துவட்டி, உடனே நெற்றியில் விபூதி தரித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி, குடுமியை முடிந்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து இரண்டு கைகளையுங் கழுவி உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, ஈர வஸ்திரத்தையும் கௌபீனத்தையும் உலரும்படி கொடியிலே போடல்வேண்டும்.

70. சிர ஸ்நானஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும் ?

கண்ட ஸ்நானமேனும், கடி ஸ்நானமேனுஞ் செய்தல் வேண்டும்.

71. கண்ட ஸ்நானமாவது யாது ?

சலத்தினாலே கழுத்தின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்திரத்தினாலே ஈரம்படும்படி துடைப்பது.

72. கடி ஸ்நானமாவது யாது ?

சலத்தினாலே அரையின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்திரத்தினாலே ஈரம் படும்படி துடைப்பது.

அநுட்டானம்

73. ஸ்நானத்துக்குப் பின் யாது செய்தல் வேண்டும்?

சுத்த சலங்கொண்டு அநுட்டானம் பண்ணி, பஞ்சாக்ஷர செபஞ்செய்து தோத்திரம் பண்ணல் வேண்டும்.

போசனம்

74. அதற்குப் பின் யாது செய்யத்தக்கது?

போசனஞ் செய்யத்தக்கது.

75. போசன பந்திக்கு யோக்கியராவார் யாவர்?

மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராயும் சம சாதியாராயும் ஆசாரம் உடையவராயும் உள்ளவர்.

76. எவர்களிடத்திலே போசனம் பண்ணலாகாது?

தாழ்ந்த சாதியாரிடத்திலும், கள்ளுக் குடிப்பவரிடத்திலும், மாமிசம் புசிப்பவரிடத்திலும், ஆசாரம் இல்லாதவரிடத்திலும் போசனம் பண்ணலாகாது.

77. இவர்கள் காணும்படி போசனம் பண்ணலாமா?

போசனம் பண்ணலாகாது.

78. எவ்வகைப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்?

கோமயத்தினாலே மெழுகப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல்வேண்டும்.

79. போசனத்துக்குரிய பாத்திரங்கள் யாவை?

வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவைகளாம்.

80. போசன பாத்திரங்களை யாது செய்தபின் போடல் வேண்டும்?

சலத்தினாலே நன்றாகக் கழுவியபின் போடல் வேண்டும்.

81. வாழையிலையை எப்படிப் போடல் வேண்டும்?

தண்டுரியாமல் அதனுடைய அடி வலப் பக்கத்திலே பொருந்தும்படி போடல் வேண்டும்.

இலை போட்டபின் யாது செய்தல் வேண்டும்?

அதிலே சலத்தினாலே புரோக்ஷித்து, லவணம், கறி, அன்னம், பருப்பு, நெய் இவைகளைப் படைத்தல் வேண்டும்.

83. போசனம் பண்ணும்போது எப்படி இருத்தல் வேண்டும் ?

வீண் வார்த்தை பேசாமலும், சிரியாமலும், தூங்காமலும், அசையாமலும் கால்களை மடக்கிக்கொண்டு செவ்வையாக இருத்தல் வேண்டும்.

84. போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும் ?

அன்னத்திலே பிசையத்தக்க பாகத்தை வலக்கையினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்துப் பருப்பு நெய்யோடு பிசைந்து, சிந்தாமற் புசித்தல்வேண்டும். அதன் பின் சிறிதுபாகத்தை முன் போலப் பிரித்து, புளிக்கறியோடாயினும், ரசத்தோடாயினும் பிசைந்து புசித்தல்வேண்டும். அதன் பின் மோரோடு பிசைந்து புசித்தல்வேண்டும். கறிகளை இடையிடையே தொட்டுக்கொள்ளல் வேண்டும்.

இலையிலும், கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்தபின் வெந்நீரேனும், தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும்.

85. போசனம் பண்ணும்போது உமிழத்தக்கதை எங்கே உமிழ்தல் வேண்டும் ?

இலையின் முற்பக்கத்தை மிதத்தி, அதன் கீழ் உமிழ்தல்வேண்டும்.

86. போசனம் பண்ணும்போது மனதை எதிலே இருத்துதல் வேண்டும்?

சிவபெருமானுடைய திருவடியிலே இருத்துதல் வேண்டும்.

87. போசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும் ?

எழுந்து, வீட்டுக்குப்புறத்தே போய், கைகளைக் கழுவி, சலம் வாயிற் கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையும் கைகளையும் கால்களையும் கழுவ வேண்டும்.

88. உச்சிட்டத்தை எப்படி அகற்றல் வேண்டும் ?

இலையை எடுத்து எறிந்துவிட்டு, கை கழுவிக்கொண்டு, உச்சிட்ட தானத்தைக் கோமயஞ்சேர்ந்த சலந் தெளித்து, மெழுகி, புறத்தேபோய்க் கைகழுவிவிட்டு, பின்னும் அந்தத் தானத்திலே சலந் தெளித்துவிடல் வேண்டும்.

89. உச்சிட்ட தானத்தை எப்படி மெழுகல் வேண்டும் ?

இடையிலே கையை எடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும், புள்ளியில்லாமலும் மெழுகல் வேண்டும்.

படித்தல்

90. போசனத்துக்குப் பின் யாது செய்யத்தக்கது ?

உபாத்தியாயரிடத்திலே கல்வி கற்கத் தக்கது.

இரவிற் செய்யுங் கருமம்

91. சூரியன் அஸ்தமிக்கும்போது யாது செய்தல்வேண்டும்?

மலசல மோசனஞ் செய்து, சௌசமும் ஆசமனமும் பண்ணி, விபூதி தரித்து, சிவபெருமானை வணங்கித் தோத்திரஞ் செய்துகொண்டு, விளக்கிலே பாடங்களைப் படித்தல்வேண்டும்.

92. அதன்பின் யாது செய்தல்வேண்டும் ?

போசனஞ் செய்து நூறடி உலாவிச் சிறிது நேரஞ் சென்றபின் சயனித்தல் வேண்டும்.

93. எப்படிச் சயனித்தல் வேண்டும் ?

கிழக்கேயாயினும், மேற்கேயாயினும் தெற்கேயாயினும் தலைவைத்து, சிவபெருமானைச் சிந்தித்துக்கொண்டு வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலைவைக்கலாகாது.

94. எப்போது எழுந்துவிடல் வேண்டும் ?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே எழுந்துவிடல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

6. சிவாலய தரிசன வியல்

95. சிவபெருமானை வழிபடுதற்கு உரிய முக்கிய ஸ்தானம் யாது?

திருக்கோயில்.

96. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும் ?

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, விபூதி இட்டுக்கொண்டு போதல் வேண்டும்.

97. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடன் யாது செய்தல் வேண்டும் ?

தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துச், சிவ நாமங்களை உச்சரித்துக் கொண்டு, உள்ளே போதல் வேண்டும்.

98. திருக்கோயிலினுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும் ?

பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

99. கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும் ?

வடக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

100. தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் எந்தத் திக்கிலே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும் ?

கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

101. எந்தத் திக்குகளிலே கால்நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது ?

கிழக்கிலும், வடக்கிலும் கால் நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது.

102. ஆடவர்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும் ?

அட்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

103. அட்டாங்க நமஸ்காரமாவது யாது ?

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

104. பெண்கள் என்ன நமஸ்காரம் பண்ணல் வேண்டும் ?

பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

105. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது ?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

106. நமஸ்காரம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயி

னும் பண்ணல் வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

107. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

108. எப்படிப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்?

இரண்டு கைகளையுஞ் சிரசிலேனும் மார்பிலேனுங் குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

109. பிரதக்ஷிணம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும்.

110. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

முன் விக்கினேசுவரரைத் தரிசனஞ் செய்து பின் சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையுந் தரிசனஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு அதன்

பின் சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசனஞ் செய்தல்வேண்டும்.

111. விக்கினேசுரரைத் தரிசிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

112. சந்நிதானங்களிலே தரிசனம் பண்ணும்பொழுதெல்லாம் யாது செய்தல் வேண்டும்?

இரண்டு கைகளையுஞ் சிரசிலாயினும் மார்பிலாயினுங் குவித்துக்கொண்டு, மனங்கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

113. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனஞ் செய்யலாகாது?

அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும்பொழுது தரிசனஞ்செய்யலாகாது.

114. அபிஷேக காலத்திலே பிரதக்ஷிண நமஸ்காரங்களும் பண்ணலாகாதா ?

அப்பொழுது உட்பிரகாரத்திலே பண்ண லாகாது.

115. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும் ?

சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு, மூன்றுமுறை கைகொட்டி, சிவதரிசன பலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

116. சண்டேசுர தரிசனத்தின்பின் யாது செய்தல்வேண்டும்?

சிவசந்நிதானத்தை அடைந்து, நமஸ்காரம் பண்ணி இருந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச் செபித்துக்கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

117. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும் ?

சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மார்சப்பிறப்பு, சூரிய சந்திர கிரகணங்கள், சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிலாயினுந் தரிசனஞ் செய்தல்வேண்டும்.

118. திருக்கோயிலிலேசெய்யத்தகாத குற்றங்கள் யாவை?

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், பாக்குவெற்றிலையுண்டல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரியம் இட்டுக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக்கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி துவசத்தம்பம் பலிபீடம் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல் முதலானவைகளாம்.

திருச்சிற்றம்பலம்

7. தமிழ்வேத வியல்

119. சைவசமயிகள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் எவை?

தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்.

120. தேவாரம் செய்தருளினவர் யாவர் ?

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர் என்னும் மூவர்.

121. திருவாசகம் செய்தருளினவர் யாவர் ?

மாணிக்கவாசக சுவாமிகள்.

122. திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினர் ?

சோழநாட்டிலுள்ள சீகாழியிலே வைதிகப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்.

123. திருநாவுக்கரசுநாயனர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினர் ?

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே வேளாளகுலத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்.

124. சுந்தரமூர்த்திநாயனர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினர் ?

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரிலே சிவப்பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்.

125. மாணிக்கவாசக சுவாமிகள் எங்கே திருவவதாரஞ் செய்தருளினர் ?

பாண்டிய நாட்டிலே உள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினர்

126. திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவார்கள் ?

சைவசமய குரவர்கள் எனப் பெயர் பெறுவார்கள்

127. யாது காரணத்தினல் இவர்கள் சைவசமய குரவர்கள் எனப் பெயர்பெறுவார்கள் ?

பல அற்புதங்களைக் கொண்டு சைவசமயமே மெய்ச்சமயம் என்று தாபித்தபடியினலே சைவசமய குரவர்கள் எனப் பெயர் பெறுவார்கள்.

128. திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை ?

(1) மூன்றாம் வயசிலே, உமாதேவியார் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப் பாலை உண்டது.

(2) சிவபெருமானிடத்திலே பொற்றாளமும் முத்துப்பல்லக்கும், முத்துச்சின்னமும் முத்துக்குடையும், முத்துப்பந்தரும், உலவாக்கிளியும், படிக்காசும் பெற்றது.

(3) வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப் பட்ட திருக்கதவு அடைக்கப் பாடினது.

(4) பாலை நிலத்தை நெய்தனிலமாக்கும் படி பாடினது.

(5) பாண்டியனுக்குக் கூனையுஞ் சுரத்தையும் போக்கினது.

(6) சமணர்களெதிரே தேவாரத் திருவேட்டை அக்கினியிலே போட்டுப் பச்சையாக எடுத்தது.

(7) வைகையாற்றிலே திருவேட்டைப் போட்டு எதிரேறும்படி செய்தது.

(8) புத்தநந்தியுடைய தலையிலே இடியிடிக்கச் செய்தது.

(9) ஆற்றிலே தாமும் அடியார்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரைசேர்த்தது.

(10) ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினது.

(11) விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

(12) விஷத்தினால் இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கினது.

(13) தமது திருக்கல்யாணந் தரிசிக்க வந்தவர்கள் எல்லாரையுந் தம்மோடு அக்கினியிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தது.

129. திருநாவுக்கரசுநாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை ?

(1) சமணர்களாலே ஏழு நாள் சுண்ணாம்பறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேவாது பிழைத்தது.

(2) சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டுஞ் சாவாது பிழைத்தது.

(3) சமணர்கள் விடுத்த யானையினால் வலஞ்செய்து வணங்கப்பட்டது.

(4) சமணர்கள் கல்லிலே சேர்த்துக்கட்டிச் சமுத்திரத்திலே இடவும் அக்கல்லே தோணியாகக் கரையேறினது

(5) சிவபெருமானிடத்திலே படிக்காசு பெற்றது.

(6) வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடினது.

(7) விஷத்தினாலே இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தது.

(8) காசிக்கு அப்பால் ஒரு தடாகத்தினுள்ளே முழுகித் திருவையாற்றில் ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறினது.

130 சுந்தரமூர்த்திநாயனாரிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை ?

(1) செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.

(2) சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்தில் உள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூரில் உள்ள குளத்திலே எடுத்தது.

(3) காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.

(4) முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம் முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தது.

(5) வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளினது.

131. மாணிக்கவாசக சுவாமிகளிடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை ?

(1) சிவபெருமானே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும்படிக்கும்

மண்சுமந்து அடிபடும்படிக்கும் பெற்றுக்கொண்டது.

(2) புத்தர்களைத் தருக்கத்தில் வென்று ஊமைகளாக்கிப் பின் ஊமை தீர்த்து சைவர்களாக்கியது

(3) பிறவி தொடுத்து ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.

(4) தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளிவந்து எழுதும்படி பெற்றுக்கொண்டது.

(5) எல்லாருங் காணக் கனகசபையினுள்ளேபுகுந்து சிவத்தோடு கலந்தது

132. இந்த அற்புதங்களினாலே யாது விளங்குகின்றது ?

சைவசமயமே மெய்ச்சமயம் என்பது நன்றாக விளங்குகின்றது.

133. தமிழ் வேதம் ஓதுதற்கு யோக்கியர் யாவர் ?

மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய் சிவதீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

134. தமிழ் வேதத்தை எப்படி ஓதுதல் வேண்டும் ?

சுத்தி செய்யப்பட்ட இடத்திலே பீடத்தின் மேலே தமிழ்வேத புத்தகத்தை வைத்து அருச்சித்து நமஸ்காரஞ் செய்து இருந்துகொண்டு அன்புடனே ஓதுதல் வேண்டும். புத்தகத்தை நிலத்திலேனும் ஆசனத்திலேனும் படுக்கையிலேனும் மடியிலேனும் வைக்கலாகாது.

135. தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பயன் பெறுவர் ?

சிவபெருமானுடைய திருவடிக்கீழ்ப் பேரின்பத்தை அநுபவிப்பர்.

திருச்சிற்றம்பலம்

சைவவினாவிடை முதற்புத்தகம்
முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்

தோத்திரத் திரட்டு

விநாயகக் கடவுள்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம் 1

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தி தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம். 2

சிவபெருமான்

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம் 3.

பங்கயன் முகுந்தனும் பரமென் றுன்னியே
தங்களி லிருவருஞ் சமர்செய் துற்றுழி
அங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்துவாம்.

நாரண னென்னுந் தேவு
நான்முகத் தவனு முக்கட்
பூரணன் றானு மாகிப்
புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா
அநாதியா யுயிர்கட் கெல்லாங்
காரண னாய மேலோன்
கழலிணை கருத்துள் வைப்பாம். 5

ஏகனே போற்றி யார்க்கும்
ஈசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம்
பரஞ்சுட ருருவே போற்றி
மேகமார் களனே போற்றி
விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி
முடித்திடு முதல்வா போற்றி 6

அம்புயா சனன்மா லின்னும்
அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி யெங்கள்
நாதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி
சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண்
இறைவனே போற்றி போற்றி. 7

பொங்கரா வணிக ளாகப்
புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்திற் பூதி
அணிந்திடு மாதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல்
வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி
தாணுவே போற்றி போற்றி. 8

எவ்வெவர் தம்மை யேனும்
யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே
அவர்க்கரு டருவாய் போற்றி

மெய்வரு தெளிவி லுன்னை
வெளிப்பட வுணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி
சிறப்பொடு தருவாய் போற்றி. 9

அம்புய மலர்மே லண்ணல்
அச்சுத ஞதி வானோர்
தம்பத மெமக்கு நல்குந்
தற்பரா வென்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம்
நவின்றிட வடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமு மீயும்
உலகுடை முதல்வா போற்றி. 10

வேதநா யகனே போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி
மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும்
பராபரா போற்றி போற்றி. 11

யாவையும் படைத்தாய் போற்றி
யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி
யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி
யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்தாய் போற்றி
யாவையும் பிரிந்தாய் போற்றி. 12

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ளுயக பசுபதி சரணம். 13

கல்லாப் பிழையுங் கருதாப்
பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையுநின் னைந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்
பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தரு
ளாய்கச்சி யேகம்பனே. 14

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை
யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற்
பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந்
தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தரு
ளாய்கச்சி ஏகம்பனே. 15

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற்
குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங்
காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற்
றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே. 16

உமாதேவியார்

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே

அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி யேத்துவாம். 17

மனிதருந் தேவரு மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள
மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே.

நின்று மிருந்துங் கிடந்து
நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்
தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு
ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி
யாமுத்தி யானந்தமே. 19

கண்ணிய துன்புகழ் கற்பதுன்
னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம்
புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ
ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி
யேழையும் பூத்தவளே. 20

வவ்விய பாகத் திறைவரு
நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு மூங்க டிருமணக்
கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற்
பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும்
போது வெளிநிற்கவே 21

கொள்ளேன் மனத்தினின் கோலமல்
லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும்
பேன்வியன் மூவுலகுக்

குள்ளே யனைத்தினுக் கும்புறம்
பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே
யளியவென் கண்மணியே. 22

மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே. 23

பின்னே திரிந்துன் னடியாரைப்
பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண்
டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி
யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற
வாமனின் றேத்துவனே. 24

சொல்லும் பொருளு மெனநட
மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க்
கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ
லோகமுஞ் சித்திக்குமே. 25

சபாபதி

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 26

வையகமின் புறநின்ற
மருமலிபொற் பதம்போற்றி
கையவரு நிலைபோற்றி
கருணைமுக மலர் போற்றி
மெய்யிலகு மொளிபோற்றி
விரவியெனை யெடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி
திருச்சிற்றம்பலம் போற்றி. 27

சிவகாமியம்மை

மன்றின்மணி விளக்கெனலா
மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணி
னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ்
சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி
நிலவுதிரு வடிபோற்றி. 28

தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ளல்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். 31

சுப்பிரமணியக் கடவுள்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி. 32

அருவமு முருவு மாகி
அனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய. 33

முழுமதி யன்ன வாறு
முகங்களு முந்நான் கர்கும்
விழிகள் னருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும்
அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டான்
அவன்றவஞ் செய்பற் பாற்றே. 34

முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்

எண்டரு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ்
சரணமுந் தெரியக் கண்டான். 35

வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிகம்
மாறி லாதவே லபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
ஆறி ரண்டுகை யறுமுகங் கொண்டு வேளடைந்தான்.

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே. 37

மூவர்கண் முதல்வன் வந்தான்
முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான்
வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரித றேற்றா
திருந்திடு மொருவன் வந்தான்
தேவர்க டேவன் வந்தான்
என்றன சின்ன மெல்லாம். 38

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு
கேசநம் கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம வாறுமுக வாதிநம
சோதிநம தற்பர மதாம்
எந்தைநம வென்றுமிளை யோய்நம
குமாரநம வென்று தொழுதார். 39

விரிஞ்சன்மா றேவ ராலும்
வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத
வொழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த
அவுணர்கோ னாவி கொள்வான்
பரஞ்சுட ருருவாய் வந்த
குமரனைப் பணிதல் செய்வாம். 40

மாயையின் வலியோ னாகி
மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம்
அரசு செய் துகநூற் றெட்டுக்

காயம தழிவின் றாகிக்
கடவுளர்க் கலக்கண் செய்த
தியசூர் முதலைச் செற்ற
குமரன்றாள் சென்னி வைப்பாம். 41

ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறின னவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினான். 42

நண்ணினர்க் கினியா யோலம்
ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம்
பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம்
யாவையும் படைத்தா யோலங்
கண்ணுதற் பெருமா னல்குங்
கடவுளே யோல மோலம். 43

தேவர்க டேவே யோலஞ்
சிறந்த சிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம்
வேற்படை விமலா யோலம்

பாவலர்க் கெளியா யோலம்
பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற
மூர்த்தியே யோல மோலம். 44

புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய ராக்கி
யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி. 45

துய்யதோர் மறை களாலுந்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம். 46

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடியா ரெல்லாம். 47

வெண்பா

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை. 48

குன்ற மெறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 49

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே ளிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. 50

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்ன வில்வேற்சூர் தடிந்தகொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 51

உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்-பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 52

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகம் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகா னினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன். 53

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—ஒருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான். 54

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம்
புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந்
தடம்புய மாறிரண்டும்

மருவடி வான வதனங்க
ளாறு மலர்க்கண்களும்
குருவடி வாய்வந்தென் னுள்ளங்
குளிரக் குதிகொண்டவே. 55

செங்கே ழடுத்த சினவடி
வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு
தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங்
கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேயென்
முன்வந் தெதிர்நிற்பனே. 56

சூலம் பிடித்தெம பாசஞ்
சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ்
சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான்
குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே
நமக்கொரு மெய்த்துணையே 57

நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசனிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. 58

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங்
கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட்
டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங்
கலாப மயூரத்தனே. 59

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்

கோடன் மயூரமுமே. 60

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. 61

குமரா சரணஞ் சரணமென்
றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமா
டிருமுருக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான
ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு
வந்தினி யென்செய்யுமே. 62

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியிற்

சேலார் வயற்பொழிற் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில
னேயந்த நான்முகனே. 63

திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூழ்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். 64

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்டைவல் வினையினூற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம். 65

திருநாவுக்கரசுநாயனார்

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

சுந்தரமூர்த்திநாயனார்

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப வன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம். 67

மாணிக்கவாசகசுவாமிகள்

சந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம். 68

அறுபத்துமூவர்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம் 69

சண்டேசுரர்

மறைதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்

தனுதிதயந் தனினின்றுந் தாபித் தான்பால்
தழைத்தவன்பர் லாட்டவந்து தடுக்கத்தாதை
எனுதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பிணுகியரு ளடைந்தவிறச் சண்டே சன்றுள்
பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே. 70

சரஸ்வதி

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம் 71

சேக்கிழார்நாயனுர்

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னற்சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னியி ருத்துவாம். 72

திருச்சிற்றம்பலம்

தோத்திரத் திரட்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளேங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழில்வென் றேறு
மதம்பூத்த விநாயகனடி வணங்கி வாழ்வாம்

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உ... லெல்லாம்.

விலை: ரூ. 1-00